உ

சிவமயம்

# சிங்கை நகரத்தார் மலர்

MITA(P) 190/03/2005



மரம் - 3 கிளை - 4

அவதாரம் பத்தெடுத்து
அறநெறியை அதில் வைத்துத்
தவறான காரியங்களைத்
தள்ளி வைப்பதற்காய்க்

கண்கண்ட தெய்வமாய்க்
காத்து நிற்கும் பெருமாளே!
ஆனந்த நிலையமாய் உலகம்
ஆகவேண்டும் உன் அருளாலே!

-சித. அருணாசலம்.

2005/04 01/08/2005

## பொருளடக்கம்

1. தலைவர் உரை.
2. ஆசிரியர் உரை.

**நிறைவேறிய நிகழ்ச்சிகள்**

1. கலை விழா.

**நடை பெறவிருக்கும் நிகழ்ச்சிகள்**

1. மாறன் சுற்றுலா.
2. இலக்கிய விழா.

**நகரத்தார் பக்கம்.**

1. பாரம்பரியப் பண்பாட்டில் நகரத்தார்
2. குறுக்கெழுத்துப் போட்டி விடைகள்
3. மூவர் முருகா!
4. உங்களுக்குத் தெரியுமா?
5. தாலாட்டு.
6. என் எதிர்கால இலட்சியம்
7. நகரத்தார்களின் கவனத்திற்கு.
8. படித்தால் மட்டும் போதுமா?
9. நகரத்தார்களின் மைல்கற்கள்
10. சாமியாடிச் செட்டியார் மகிமை
11. ஒன்றிணைந்து உருவாக்கிய நாடு
12. கலை நிகழ்ச்சிகள்
13. கோவில் நிகழ்ச்சிகள்

**இதர செய்திகள்.**

1. புது உறுப்பினர்கள்
2. பிறப்பு
3. மறைவு

***சிங்கை நகரத்தார் மலர்***
15A, தேங்க் ரோடு
சிங்கப்பூர் 238065.
தொலைபேசி எண்: 67379393.
http://www.sttemple.com
http://www.singainagarathar.com

## தலைவர் உரை

அன்புடையீர், வணக்கம்!

தங்களது அனைவரது ஒருமித்த ஆதரவினால், கலை நிகழ்ச்சிகள் மிகவும் வெற்றிகரமாக நடந்தன. இறுதி வரை அனைவரும் இருக்கைகளை விட்டு அசையாத வண்ணம், நிகழ்ச்சிகள் அமைந்திருந்தது என்பதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

குழந்தைகளது கலை ஆர்வம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. மேடையிலே ஏற வேண்டும், பிறகு பாடவோ, பேசவோ வேண்டும் என்பதில் பயமோ அல்லது கூச்சமோ சிறிதும் இல்லாமல் பிள்ளைகள் இருப்பதற்குப் பெற்றோருக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது சமூகத்தின் முன்னேற்றத்தின் எதிரொலிதான் இது.

இதை அடுத்து இலக்கிய விழாவும், மகளிர் விழாவும் நடைபெற இருக்கின்றன. இலக்கிய விழாவின் ஆரம்ப அங்கமாக பார்வையாளர்கள், தங்களது திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் "கவிதைப் பூங்கா" என்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாங்கள் படித்து ரசித்த அல்லது சொந்தமாக எழுதிய கவிதைகளை வாசிக்கலாம். இதனைத் தொடர்ந்து நம் நகரத்தார்களே பங்கேற்கும் கவியரங்கம் முனைவர் திரு. திண்ணப்பன் அவர்கள் தலைமையிலும், பட்டிமன்றம் முனைவர் திரு. ஐங்கரன் அவர்கள் தலைமையிலும் நடைபெறவிருக்கிறது.

நமது நகரத்தார்களிடம் தமிழ் ஆர்வம் முளைத்துத் தழைத்தோங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இம்முயற்சியினை ஆரம்பித்து வைக்கிறோம். இது தொடர்ந்து நடைபெறும் என்ற நம்பிக்கையும், இந்த விழாக்களையும் வெற்றியுடன் நடத்த உங்களது ஆதரவு கண்டிப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.

புதிய முகவரித் தொகுப்பைப் பற்றிய அறிவிப்பைக் கேட்டிருப்பீர்கள். வெறும் முகவரிகளின் தொகுப்பாக மட்டுமில்லாமல், மாறுபட்ட சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்ற நம் குழந்தைகள், இதன் மூலம் நகரத்தார் பற்றிய விபரங்களை எளிதில் தெரிந்து கொள்ளும் விதத்தில் அமைந்த விபரங்களையும் கொண்டிருக்கும்.

நன்றி
**அரு. கருப்பையா**
**தலைவர்**



## ஆசிரியர் உரை

வணக்கம்!

"திருவாசகத்திற்கு உருகாதார்,
ஒரு வாசகத்திற்கும் உருகார்."

திருமுறை மாநாட்டின் வெள்ளி விழா நிகழ்ச்சிகளின் ஒரு பகுதி கடந்த 22-07-05 முதல் 24-07-05 வரை ஸ்ரீ தெண்டாயுதபாணி ஆலயத்தில் நடைபெற்றது. சொல் வேந்தர் சுகி சிவம் உள்ளிட்ட சிறந்த பேச்சாளர்களின் திருமுறை விளக்கச் சொற்பொழிவுகளைக் கேட்டு. திருமுறை உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பீர்கள். இவை கேட்டு இன்புறுவதற்கு மட்டுமின்றி, நாமும் குறிப்பாக நமது பிள்ளைகளும் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டியவையாகும்.

சைவநெறிகளை தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். பொருள் ஈட்டும் பொருட்டு கடல்கடந்து வாழும் அவசியம் வந்தபோதும், சைவநெறிமுறைகளை விடாது பற்றிக்கொண்டிருந்தது மட்டுமின்றி அவை தழைத்து ஓங்கவும் வழி செய்தவர்கள் நம் நகரத்தார்கள்.

வேறு எந்த மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்கு இருக்கிறதென்றால் அதற்குக் காரணமே இந்தத் திருமுறைகள்தான். அறுபத்து மூன்று நாயன்மார்கள் செய்த சைவத்தொண்டும், தமிழ்த் தொண்டும் எக்காலத்திலும் நிலைத்து நின்று பல சிந்தனைகளை அளிக்க வல்லன. தமிழ் இலக்கியங்கள் என்றாலே பக்தி இலக்கியங்கள் தான் என்று குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு இந்தத் திருமுறைகள் பெரும் பங்கை ஆற்றியுள்ளன.

நாடு விட்டு நாடு வந்து, மாறுபட்ட சூழ்நிலைகளில் வாழ்ந்தாலும்; இயந்திரமயமாகவும், போட்டித்திறன் மிக்கதாகவும் உள்ள இக்கால வாழ்க்கையில் பள்ளி நடவடிக்கைகளுக்காக அதிகமாகவே பாடுபட்டாலும்; நமது குழந்தைகளில் சிலர், தேவார வகுப்புகளுக்கும் நேரத்தை ஒதுக்கி மனமொன்றிக் கற்றுக் கொள்வதை நினைக்க மிகவும் மகிழ்வாக இருக்கிறது. இதுபோல் எல்லாக் குழந்தைகளும் இந்தத் தமிழமுதத்தைக் பருகுவதற்கு முன்வர வேண்டும் என்பதைப் பெற்றோர்களிடத்தில் ஒரு வேண்டுகோளாக வைக்கிறேன்.

நன்றி
**மங்கையர்க்கரசி செல்லப்பன்,**
**ஆசிரியர்.**

# நிறைவேறிய நிகழ்ச்சிகள்

1) **கலை நிகழ்ச்சிகள் (25-06-05) :-**

இந்த வருடமும் கலை நிகழ்ச்சிகள் மாலையில் சிறப்பாக நடந்தன. நிகழ்ச்சிகள் மாலை 5.30 க்குத் தொடங்கி, கொடுக்கப்பட்ட கால அளவில் முடிக்கப்பட்டதும், 700க்கும் அதிகமானோர் ஆதரவு தந்ததும் மிகப் பெரிய வெற்றியாகும்.

# நடை பெறவிருக்கும் நிகழ்ச்சிகள்

1) **மாறன் சுற்றுலா (05-08-05 - 07-08-05)**

மரத்தாண்டவர் கோவில் மற்றும் குவாந்தானுக்கான சுற்றுலாவிற்குப் பதிவு செய்தவர்கள் ஆகஸ்ட் 5-ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு 07.00 மணிக்கு ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயிலில், கடவுச்சீட்டு (Passport) மற்றும் விசா ஆகியவற்றுடன் தயாராக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

2) **இலக்கிய விழா (03-09-05)**

நகரத்தார்களுக்கும், நல்ல தமிழுக்கும் ஒரு பிணைப்பு உண்டு. அவர்களது தமிழ் ஆர்வமும், ஆற்றுகிற தொண்டும் எப்போதுமே அதிகம்தான். அதில் சங்கத்தின் பங்களிப்பாக, கவிதைத் தொகுப்புகள் அடங்கிய கவிதைப் பூங்கா, கவியரங்கம் மற்றும் பட்டிமன்றம் ஆக மூன்றையும் சேர்த்து இலக்கிய விழாவாக எதிர்வரும் 03-09-05 சனிக்கிழமை அன்று படைக்க இருக்கிறோம். பிரம்மாண்டமாக நடைபெறவிருக்கும் இந்த விழாவில், பார்வையாளர்களும் பங்கு பெறும் விதத்தில், நிகழ்ச்சிகளில் ஒன்றாக, கவிதைப் பூங்காவை ஏற்படுத்தி உள்ளோம். பார்வையாளர்கள் தாங்கள் எழுதிய, படித்த கவிதைகளை ஒரு நிமிடத்திற்கு மிகாமல் வாசிக்கலாம். கவிதைப் பூங்காவில், பங்கு பெற முன்னதாகவே பதிவு செய்து கொள்ளுங்கள். பதிவு விபரங்கள் கீழே! கூடுமானவரை சீக்கிரம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். நிகழ்ச்சியின் இறுதியில் இரவு உணவு வழங்கப்படும்.

| | |
|---|---|
| சித. அருணாசலம் | 65656324 |
| ராம. வைரவன் | 93860497 |

எல்லோருக்கும் நகரத்தார் சங்கத்தின் மனமார்ந்த தேசிய தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# நகரத்தார் பக்கம்

*பாரம்பரியப் பண்பாட்டில் நகரத்தார்*

திரை கடல் ஓடித்
திரவியம் தேட வந்தாலும்,
பூமணச் சடங்குடன்,
திருமணம் நடத்துவது,
சீர் வரிசை மாறாமல்,
செட்டிநாட்டுச் சீமையிலே.

பல நாள் சேர்த்ததெல்லாம்
ஒரே நாளில் செலவு செய்ய,
உள்ளத்தில் உவகையுடன்
இல்லத்தில் விருந்தளிக்கும்
பண்பாட்டில் குறைவில்லை - மொய்ப்
பண ஏட்டில் மாற்றமில்லை.

எண்ணிக்கையில் குறைவின்றி
இலை நிரம்பிய உணவுகளை
எடுப்பதற்குக் கை எட்டாது.
அடுத்தடுத்துப் பரிமாறி - இன்னும்
கொஞ்சம் என்று விசாரிக்கும்
உபசாரம் வேறெங்கும் கிட்டாது.

இருபத்தியோரு நாட்களுக்கு - நூல்
இழை ஒன்றை, நாளுக்கொன்றாய்
கணக்கு வைத்து விரதம் இருந்து
வணங்கும் நோன்பு நாளில் - மரபாக
வயிற்றில் சுமந்து வரும்
வாரிசுக்கும் இழை வந்து சேரும்.

**-சித. அருணாசலம்.**

அறிவிப்பு: சென்ற இதழில் வெளியான முகவரி மாற்றம் பகுதியில் திரு நாக. நாச்சியப்பன், அவர்களது முகவரியில் மின் அஞ்சல் முகவரி தவறுதலாக அச்சிடப்பட்டது. கவனக் குறைவால் ஏற்பட்ட தவறுக்கு வருந்துகிறோம். இந்த இதழில் அவரது சரியான மின் அஞ்சல் முகவரி வெளியாகி உள்ளது.
Ref. No. Y0121 - Mr. NK. NACHIAPPAN's e-mail should be murugu@singnet.com.sg

## குறுக்கெழுத்துப் போட்டி 3 - விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 மா | சி | ம | க | ம் | | | | | 2 கா |
| தி | | | | | | | | | ளை |
| ரி | | | | | | 3 மு | த் | தை | யா |
| கி | | | | | | | | | ர் |
| 4 ரா | க் | கா | ல | ம | ட | ம் | | | கோ |
| ம | | | | | | | | | யி |
| ம் | | டி | கு | ங் | த | த் | 5 ஆ | | ல் |
| | | ட் | | | | | | | |
| | | 6 ப | ட் | டி | ன | த் | தா | ர் | |
| | | ன் | | | | | | தூ | |
| 7 பூ | | ல | | | | | | த் | |
| ம | | பா | | | | | | ள | |
| ண | | கி | | | | ல் | ள | ள் | 8 வ |
| . | ய | 11 ம | ரு | 10 தி | | | | 9 ப | |

## மூவார் முருகா!!

மூவார் முருகா! மூவார் முருகா!
என் மூத்தோர் வணங்கிய
முத்தமிழ் அழகா!

மூவார் வந்துனைக்
கண்டதும் நெஞ்சினில்
பரவசம் கொண்டேனே!

உன் அழகிய உருவினை
அள்ளிப் பருகிட
கண்கள் துடித்தனவே!

உன் அன்பு விழிகளில்
கருணை சுரந்திடும்
காட்சிகள் கண்டேனே!

உனை அடிக்கடி தரிசிக்க
அடியேன் எனக்கு
கொடுப்பினை ஏதுமிலையே!

அயலூர் வாழும்
அடியேன் எனக்கு

வேண்டிய வரங்களைத்
தந்திட நீயும்
விரைந்து வந்திடணும்!

உனைக் கண்டு வணங்கிட
காக்க வைத்திடல்
செய்வது முறையாமோ?

உன் அழகிய மயிலும்
அருகினில் இருக்க
வருவதில் தாமதமேன்?

கார்த்திகைப் பூசை
உன் கவின்மிகு விழாவெனச்
செப்பினர் செட்டிமக்கள்

உன் கார்த்திகை விழாவினைக்
கண்டு மகிழ்ந்திட
உள்ளம் துடிக்குதையா!

வருகிற கார்த்திகை
வளர்பிறை யன்று



அருகினில் நீயிலையே!

உள்ளம் உருகி
உனைநான் அழைத்தால்
உடனே வந்திடணும்!

வருவேன் உனைக்காண!

வரங்களைத் தந்திட
வடிவேலுடனே
காத்திரு நீ அங்கே!

- ராம. வைரவன்

## *உங்களுக்குத் தெரியுமா?*

- சோழ நாட்டில் மன்னர்கள் நகரப்பகுதியில் கோட்டைகளில் வாழ்ந்தபோது, நமது முன்னோர்கள், நாட்டுப்புறத்தில் கோட்டைக்கு நிகரான வீடுகளைக் கட்டி வாழ்ந்ததால், நாம் "நாட்டுக் கோட்டை நகரத்தார்கள்" என்று அழைக்கப் பெற்றோம்.
- நகரக் கோயில்களில் ஒன்றான நேமம் கோயிலை, ஜெயம் கொண்ட சோழ மன்னர் கட்டியதால், அங்கு எழுந்தருளிய இறைவனுக்கு "ஜெயம் கொண்ட சோழீசர்" என்று பெயர் வழங்கி வருகிறது.
- சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாட்டுக்கு நகரத்தார்கள் வந்த போது, முதலில் குடியேறிய ஊர் இளையாத்தங்குடி.
- ஒரு மனிதன் பிறந்த 60 ஆண்டுகள் கழித்து, அதே தமிழ் வருடம், மாதம், தேதியில் அவன் பிறந்த நட்சத்திரம் வருகிறது. இதனால் இந்த பிறந்த நாள் விசேஷமாகக் கருதப்பட்டு சஷ்டியப்த பூர்த்தியாகக் கொண்டாடப் படுகிறது.

-திருமதி ராதா. அருணாசலம்.

## தாலாட்டு

மலை வேம்பு வெட்டி, மதுரைத் தேர் உண்டு பண்ணி
இராணித்தேர் ஓடுதென்று நாட்டார் வடந் தொடுக்க
தெருவார் தெருவழகாம், மீனாட்சி சித்திரைத் தேரழகாம்
பொற்றாமரையழகாம், புகழ்பெரிய சன்னிதியாம்
வற்றாத எழுகடலாம், வாழ்மதுரை மீனாட்சி
வரிசை பெற வந்தாளாம்
ஏறுவதும் வெள்ளானை ஏகாந்த மீனாட்சி
இறங்குவதும் வெள்ளி இரதம்
ஆளுவதும் தென்மதுரை அணை மதுரைப் பட்டிணமாம்.
வெற்றிவேல் சப்பரமாம், மீனாட்சி வீதியெல்லாம் பூக்கடையாம்.
பகலும் வேல் சப்பரமாம், பாண்டி மகள் மீனாட்சி
பாதையெல்லாம் பூக்கடையாம்.

-திருமதி சோம. விசாலாட்சி

**அறிவுத்திறன் போட்டியில் (28-05-05), தொடக்க நிலை 4 முதல் 6 வரையிலான மாணவர்களுக்கு நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கட்டுரை:-**

## என் எதிர்கால இலட்சியம்

மனித வாழ்வு அனைத்திற்கும் ஏதாவது ஒரு இலட்சியம் தேவை. இலட்சியம் இல்லாத வாழ்க்கைக்கு அர்த்தமேயில்லை. இதை நம் முன்னோர்கள் நமக்கு கூறி நம்மை எச்சரிக்கை செய்துள்ளனர்.

எனது இலட்சியம் ஒரு பாலர் பள்ளி ஆசிரியராக வேண்டும் என்பதே ஆகும். எனக்கு ஐந்து வயதாயிருக்கும் பொழுது நான் பாலர் பள்ளிக்குச் சென்றேன். அப்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு மிக பொறுமையுடனும், அக்கறையுடனும் கற்றுக் கொடுப்பதை நான் அறிந்தேன். அது என்னை மிகவும் கவர்ந்தது. அச்சிறு வயதில் ஆசிரியராவது மிகவும் சுலபம் என்று நான் எண்ணினேன்.

பிறகு எனக்கு ஏழு வயதாயிருக்கும் பொழுது நான் தொடக்கநிலைப் பள்ளிக்குச் சென்றேன். அங்குள்ள ஆசிரியர்கள் மிகவும் கண்டிப்பாகவும், அதே சமயத்தில் மாணவர்களிடம் அன்புடன் இருப்பதையும் நான் அறிந்தேன். அதுவும் என்னைக் கவர்ந்தது. சில சமயங்களில் நான் வீட்டில் அவர்களைப் போல் செய்தும் பார்த்திருக்கிறேன்.

குறைவாக மதிப்பெண் வாங்கும் மாணவர்களுக்கு துணைப்பாடம் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் நிதானமாகவும், அமைதியாகவும் கற்றுத் தருகின்றனர். ஆகா! என்ன அருமை ஆசிரியர்கள்! என்று என் மனதிற்குள் அடிக்கடி நினைத்துக் கொள்வேன். இதெல்லாம் என் ஆர்வத்தை மேலும், மேலும் தூண்டுகிறது.

இக்காலத்தில் அரசாங்கம் கல்விக்கும், அதைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் முக்கியத்துவத்தைத் தருகின்றது. ஆசிரியர்கள் மிகவும் தேவை என நாம் செய்தித்தாள்களில் படித்துள்ளோம். ஆகவே நான் கடினமாகப் படித்து என் இலட்சியத்தைச் சாதிப்பேன்.

**– செல்வி நா. நாச்சம்மை,**
**தந்தை திரு. நாச்சியப்பன் (Y0120)**



## நகரத்தார்கள் கவனத்திற்கு

நமது ஆலயத்தில் அனைத்து சன்னதிகளிலும் அர்ச்சனை மூலம் நடக்கும் இறை வழிபாடு முறைப்படுத்தப்பட்டது என்பது அனைவரும் அறிந்ததே! அதாவது அலுவலகத்தில் அர்ச்சனைச் சீட்டை உரிய காசு கொடுத்து வாங்கி பண்டாரம் அல்லது குருக்களிடம் கொடுத்த பிறகு அர்ச்சனை செய்யப்படும். சமீப காலமாக நம் நகரத்தார்களிலேயே சிலர் அர்ச்சனை சீட்டு வாங்காமலேயே நேரடியாக அர்ச்சகரிடம் சென்று அவர்களுக்குப் பணம் கொடுத்து அர்ச்சனை செய்து கொள்கிறார்கள். பலர் முன்னிலையில் தமக்கு கோயில் அர்ச்சகர்களிடம் செல்வாக்கு இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காக இது போல் செயல்படும் எண்ணம் ஏற்படலாம். ஆனால் இந்தக் குறுக்கு வழி பல விரும்பத்தகாத சம்பவங்களுக்கு வழி வகுக்குகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?

1. பணம் நேரடியாக அர்ச்சகர்களிடம் செல்லும் போது பணத்தின் மேல் பற்று வந்துவிட, இறை வழிபாட்டை மனப்பூர்வமாக நடத்தத் தவறிவிடுகிறார்கள்.
2. யார் அதிகம் பணம் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்க ஆரம்பித்து விடுவார்கள்.
3. பணம் குறைவாகக் கொடுப்பவர்கள் உதாசீனப்படுத்தப் படுவதும், பணத்தைப் பொறுத்து மதிக்கப்படுவதும் வழக்கமாகிவிடும்.
4. இதனைப் பார்த்து நகரத்தார் அல்லாத பிறர் இந்தக் கோவிலில் இதுதான் வழக்கம் என்றெண்ணி இன்னும் அதிகமாகக் கொடுக்கத் துவங்கினால் நகரத்தார் ஆலயத்தில் நகரத்தார்களுக்கே மதிப்பு குறைந்து விடும்.,
5. ஊழியர்களுக்கு செய்கின்ற தொழிலில் ஈடுபாடு இல்லாமல் போய்விடுவதற்கு இதுவும் ஒரு காரணமாய் அமைகிறது.
6. முக்கியமாக ஆலய நிர்வாகத்திற்கு வருமானம் பெருமளவு குறைந்து விடும்.
7. தவிர கோவில் செலவில் வாங்கி வைத்திருக்கிற வெற்றிலை பாக்கு தேங்காய் பழத்திற்கு அர்ச்சகரிடம் பணம் கொடுப்பது முறையா?

கோவில் நம்முடையது என்பதால் நகரத்தார் அல்லாத பிறருக்குத்தான் இந்தச் சீட்டு எல்லாம். நமக்குத் தேவையில்லை என்று நினைத்ததாக நம்மவர் சிலர் சொன்னார்கள். இப்படியொரு எண்ணம் வெளியே பரவினால் அது நமது கோவிலின் வளர்ச்சிக்கும் நிலைப்பாட்டுக்கும் நலம் தரும் என்றா நினைக்கிறீர்கள்?

இது போன்ற தர்ம சங்கடங்களுக்கு வழி விடாமல் முறைப்படி அர்ச்சனைச் சீட்டு வாங்கி வழிபடுவது சாலச் சிறந்ததாகும். இதற்கு உங்கள் அனைவரது ஒத்துழைப்பும் அவசியம். நாம் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருத்தல் அவசியம். தவறுகளைத் தட்டிக் கேட்கும் நிலையிலிருக்கும் நாமே தவறுகளுக்கு இடம் கொடுக்கலாமா? அர்ச்சகருக்கு பணம் தர எண்ணினால் அலுவலகத்தில் அர்ச்சனைச் சீட்டை உரிய காசு கொடுத்து வாங்கி பண்டாரம் அல்லது குருக்களிடம் கொடுத்த பிறகு மேற்கொண்டு அர்ச்சனைத் தட்டில் ஒரு தொகை போடுவதில் தவறில்லை.

சிந்தித்துச் செயல்படுவது நமது கடமை.

**கோயில் நிர்வாகம்**

# படித்தால் மட்டும் போதுமா?

என்னால் முடியாது..
நான் செய்ய மாட்டேன்.. நான் எதுக்கு செய்யணும்?
எனக்கு இதுல என்ன இருக்கு?
என்னோட பங்கு எங்கே?..
என் நண்பர்கள் எல்லாம் வைச்சிருக்காங்க, எனக்கும் வேண்டும்..
என்னை உங்களுக்குப் பிடிக்கலை..

எங்கேயோ கேட்ட வசனம் மாதிரி இருக்கிறதா? நம் பிள்ளைகள் சிலர், குறிப்பாகப் பருவ வயதினர் இப்படிப் பேசுவது முன்பை விட இப்போது பெருகி வருகிறது. இந்தப் போக்கை எப்படிக் குறைக்கலாம் அல்லது தவிர்க்கலாம் என்று பெற்றோர் சிந்திக்க வேண்டியது அவசியம். ஆனால், அதற்கு முன்பு இவற்றுக்கு என்ன காரணம் என்று அறிய வேண்டும்.

பொதுவாக, பெற்றோருக்கு அவர்களது இளமைக் காலத்தில் சில ஏக்கங்கள் இருந்திருக்கலாம். தங்களுக்குக் கிடைக்காத வசதிகள், பொழுது போக்கு அம்சங்கள், கற்றுக் கொள்ள நினைத்து கை கூடாமல் போன கலைத் திறன்கள் இப்படிப் பல. தாங்கள் ஆசைப்பட்டு அடைய முடியாமல் போன விஷயங்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டும் என்று அவர்கள் நினைப்பதில் தவறில்லை. ஆனால், அவை பிள்ளைகளுக்குப் பிடிக்கிறதா என்பது முக்கியம். அது மட்டுமல்ல இன்றைய அதிவேக அறிவியல் உலகத்தில், குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய கட்டாயத்துக்கும் பெற்றோர்கள் தள்ளப் படுகிறார்கள். இருப்பினும் அதை அவர்கள் மிகைப்படுத்தி வற்புறுத்தும் போது பிள்ளைகள் தத்தளிக்கிறார்கள்.

பெரும்பாலான குடும்பங்களில் பெற்றோர் இருவரும் வேலைக்குப் போகிறார்கள். சில வீடுகளில் பெண்கள் வீடுகளில் இருக்கிறார்கள். அது அவரவர் விருப்பம். இதில் எது சரியான முடிவு, எது தவறான முடிவு என்று சொல்வதற்கில்லை. ஆனால் குழந்தை வளர்ப்பதை இந்த முடிவு பாதிக்கக் கூடாது. இங்கு தான் அதிகமானோர் கோட்டை விட்டு விடுகிறார்கள். வீட்டில் இருக்கும் பெண்கள் மிகவும் கண்டிப்பாக இருக்கிறார்கள். வேலைக்குப் போகும் பெண்கள் செல்லம் கொடுக்கிறார்கள். பொதுவாக இங்கு என்னாகிறது? கட்டுப்பாடு குறைகிறது. அன்பு இருக்க வேண்டியதைவிட அதிகமாகிவிடுகிறது. சில நேரங்களில் கோபம் கொப்பளிக்கிறது. இந்தப் பின்னணியில் வளரும் குழந்தைகளிடம் வேறு எத்தகைய குணங்களை எதிர்பார்க்க முடியும். இந்தக் குணங்கள்தான் வார்த்தைகளாக, கேள்விகளாக வெளிப்படுகிறது. நெல் விதைத்தால் நெல்தானே விளையும், எள்ளா விளையும்?

பெற்றோர், பிள்ளைகளின் மீது சுமத்தும் குற்றங்கள் என்ன? சரியாகப் படிப்பது இல்லை. சொல்வதைச் செய்வதில்லை, செய்வதைச் சொல்வதில்லை. சீக்கிரம் தூங்கச் செல்வதில்லை, அறை அலங்கோலமாக இருக்கிறது. பிடிவாத



குணம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இவைதானே! எந்தக் குழந்தையும் முழுமையாகப் பண்பட்ட குழந்தையாகப் பிறப்பதில்லை.

**சுட்டால் தான் சூரியன்.**
**குளிர்ந்தால் தான் நிலவு.**
**குறும்பு செய்தால் தான் குழந்தை.**

வாழ்க்கைச் சாலையில் பெற்றோர், போக்குவரத்து விளக்குகள் மாதிரி. அவர்களின் வழிகாட்டுதலுக்கு, ஏற்பவே குழந்தைகளாகிய அந்த வாகனங்கள் செல்லும். நில் என்றால் நிற்கும். செல் என்றால் செல்லும். காத்திரு என்றால் காத்திருக்கும். அதே நேரத்தில் விளக்குகள் தடுமாறினால், வாகனங்கள் தடம் மாறும். பிள்ளைகளுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தாய், தந்தையர் இருவரும் வேலைக்குப் போனாலும் பிள்ளைகளிடம் எப்போதும் போலவே நடந்து கொள்வதே, நலமாக இருக்கும். அவ்வாறு செய்தால், அவர்கள் சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயல மாட்டார்கள்.

பொது இடங்களில் பெற்றோர் தங்கள் குழந்தைகளைப் பற்றிப் பேசும் போது நல்ல விஷயங்களைப் பேசினால் சிறப்பு. ஆனால் மனக்குறைகளை இறக்கி வைப்பதற்காக தாங்கள் பெற்ற செல்வங்களைப் பற்றி மற்றவரிடம் தவறாகப் பேசுவது, தற்காலிகமாக நிவாரணம் தரலாம். ஆனால் பெற்றவர்கள் அவ்வாறு தங்களைப் பற்றிப் பேசியது தெரிய வந்தால் நிச்சயம் பிள்ளைகளின் மனத்தில் என்றும் ஆறாத ரணமாக அது மாறலாம்.

படிப்பில் கவனம் செலுத்தி வகுப்பில் முதலாவதாக வந்தால் மட்டுமே சிறந்த குழந்தை என்றாகிவிடாது. மதிப்பெண்கள் கொஞ்சம் முன்பின்னாக எடுத்தால் பாதகமில்லை. படித்தால் மட்டும் போதுமா? படிப்பு, படிப்பு, படிப்பு, என்று பிள்ளைகளை வாட்டினால், அவர்களின் ஏட்டுக் கல்வியை வேண்டுமானால் அது மேம்படுத்தும். வாழ்க்கைக்குத் தேவையான நாட்டுக் கல்விக்கு ஒரு போதும் அது உதவாது. அவர்களின் அடிப்படை நற்குணங்களே அவர்களுக்கு எப்போதும் கைகொடுக்கும்.

ஆகவே, அவர்களின் அவசியம் அறிந்து பாதை காட்டும் அதே நேரத்தில், அத்தகைய நல்ல குணங்களை ஆரம்பத்திலிருந்தே விதைக்க வேண்டும். அதுவே அவர்களைப் பண்பட்ட மனிதர்களாக்கி, வாழ்க்கையை வெற்றிகரமாக எதிர் கொள்ளச் செய்யும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

எண்ணம்– **திருமதி அலமேலு ஐங்கரன்**
எழுத்து– **திருமதி சுந்தரி சபா. முத்து நடராஜன்.**

## நகரத்தார்களின் மைல்கற்கள்

"நகரத்தார் சமூகம்" பல துறைகளிலும், தம் முத்திரையைப் பதித்துள்ளது. நகரத்தார்கள் ஆற்றிய தொண்டுகளும், பணிகளும் வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை. அவற்றில் சில "நகரத்தார் பற்றிய ஆய்வு நூல்களில் இருந்தும், பிறர் சொல்லக் கேட்டதிலிருந்தும்", தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

1. நீர் வளமும், மண் வளமும் நிறைந்திருந்தும், முன்னேற்றம் அடையாமல் இருந்த பர்மாவை செழிப்பான நாடாக ஆக்கியதில் நகரத்தார்களுக்குப் பெரும் பங்கு உண்டு.
2. இலங்கை, இந்தோசீனா, மலேயா போன்ற நாடுகளில் தேயிலைத் தோட்டங்களையும், இரப்பர் தோட்டங்களையும் உருவாக்கி அந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்தவர்கள் நகரத்தார்கள்.
3. மலேயாவில் முதன் முதலாக இரப்பர் பயிரிட்டவர், நச்சாந்துபட்டியைச் சேர்ந்த நகரத்தார்கள்.
4. தமிழகத்தில் சுமார் 250 பள்ளிகளை நகரத்தார்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்தியாவிலேயே கல்விக்காக அதிகம் வாரி வழங்கிய சமூகம் என்ற வகையில் இவர்களது கல்வித் தொண்டு வரலாற்றுச் சிறப்புடையது.
5. தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழிலேயே வழிபாடு நடைபெற வேண்டும் என்கிற இயக்கம் முதன் முதலில் செட்டிநாட்டில் தான் தோன்றியது.
6. காந்தியடிகள் வாழ்ந்த காலத்திலேயே, அவரின் வாழ்க்கையைத் திரைப்படமாக எடுத்தவர் ஏ.கே. செட்டியார். அதற்குப் பின்னணிக் குரல் கொடுத்தவர் கம்பன் அடிப்பொடியாவார். பெரும் பொருள் கொடுத்து இப்படத்தை வெளிநாட்டினர் வாங்க முயன்ற போது, 'தேசப்பிதாவை விற்க மாட்டேன்' என்று கூறி மறுத்து விட்டார்.
7. நகரத்தார்களின் முயற்சியால் தான் கடந்த 150 ஆண்டுகளாகக் காசியில் தேவார ஓசை கேட்டுக் கொண்டிருக்கிறது. இங்கு நகரத்தார் கட்டளையாகத் திருவனந்தலும், உச்சிக் காலமும், அர்த்தசாமப் பூசையும் எக்காரணத்தாலும் ஒரு வேளை கூடத் தடைப்படாமல் நடந்து வர நகரத்தார்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.
8. காந்தியடிகள் கதர் இயக்கத்தைத் தொடங்குவதற்கு முன்பாகவே நகரத்தார்கள் கதர் அணிந்தனர், நூல் நூற்றனர். செட்டிநாட்டில் பெண்கள் நீண்ட காலமாகவே கை ராட்டையால் நூல் நூற்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மணப் பெண்ணிற்கு நூல் நூற்கும் இராட்டினத்தைச் சீதனமாகக் கொடுக்கம் வழக்கம் நீண்ட காலமாகவே நகரத்தாரிடையே இருந்து வந்தது.
9. 1906-ல் இந்தியன் வங்கியும், 1937-ல் இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கியும், 1943-ல் மதுரை வங்கியும் நகரத்தார்களால் தொடங்கப்பட்டன.



10. உலகிலேயே மொழியைக் தெய்வமாக்கிக் கோவில் கட்ட வேண்டும் என்ற இலட்சியம் ஒரு நகரத்தார் சிந்தனையில் தான் முதன்முதலில் தோன்றியது. இந்த இலட்சியத்தால் உருவானதே, காரைக்குடியில் அமையப் பெற்றுள்ள "தமிழ்த்தாய் கோயில்". இதற்குக் காரணமாயிருந்தவர் கம்பன் அடிப்பொடி சா.கணேசன் அவர்கள்.
11. நகரத்தார்கள் கட்டிய கோயில்கள் வாஸ்து சாஸ்திரப்படியே கட்டப்பட்டுள்ளன.
12. 1928-ல் ஆரம்பிக்கப்பட்ட 'சிங்கப்பூர் செட்டியார் வர்த்தக சபை', 'இந்திய வர்த்தக சபை' தொடங்கப்படுவதற்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்னதாகவே தொடங்கப்பட்டு விட்டது.

(ஆதாரம்;- 1. நகரத்தாரின் அறப்பணிகள் - டாக்டர் நா.வள்ளி - கிருஷ்ணா பதிப்பகம், 2. நகரத்தார் கலைக்களஞ்சியம் - மணிவாசகர் பதிப்பகம்)

**-திருமதி. சௌந்தரநாயகி வைரவன்**

## சாமியாடிச் செட்டியார் மகிமை.

**கண்டனூர் பெயர் வரலாறு:** பொன்னி ஆறு பாயும் சோழவள நாட்டைப் புகார் நகரைத் தலைநகராய்க் கொண்டு ஆண்ட 'கண்டன்' என்னும் சோழ வேந்தன், வெண்குட்டத்தால் பாதிக்கப் பட்டான். அறவோர்கள் சொற்படி சிவத்தலப் பயணம் மேற்கொண்டு இராமேசுவரம் செல்லும் வழியில், வீரவனத்தை (இன்றைய சாக்கோட்டை) அடுத்த மேற்குப் பகுதியில் இருந்த பெருங்காட்டில் மடம் ஒன்றில் படைகளோடு தங்கியிருந்தான். வீரவனத்தில் எழுந்தருளிய வீரசேகரப் பெருமான் என்ற திருமுடித் தழும்பர், சிவபெருமான் அருளால் நோய் நீங்கப் பெற்றான்.

சோழன் கண்டன், கோயில் திருப்பணி செய்தான். அந்த கானச்சோலையில் மனைவியோடு நிலையாகத் தங்கி, வீரசேகரப் பெருமானையும், உமையம்மையையும் வணங்கி வரலானான். காட்டை நாடாக்கி, வீடுகள் அமைத்துப் பலரைக் குடியேற்றினான். தன் பெயர் வரலாற்றில் விளங்கத் தக்க வகையில் 'கண்டன்ஊர்' எனப் பெயரும் இட்டான். இவ்வாறு உருவான கண்டனூருக்கு, புதுக்கோட்டை மாவட்டம் தேனிப்பட்டியிலிருந்து, பெரியகருப்பன் செட்டியார் என்ற குப்பான் செட்டியார் வந்து குடியேறினார். அங்கு வந்து முதன் முதலில் குடியேறிய குடும்பங்களில் அருளாடியார் குடும்பமும் ஒன்று. கண்டனூருக்கு வாய்த்த பல பெருமைகளுள் குறிப்பிடத்தக்கது, இரணிக்கோயில் பிரிவைச் சேர்ந்த பழநிக் கோயில் அருளாடி, குட்டையன் செட்டியார் (சாமியாடிச் செட்டியார்), பெரியகருப்பன் செட்டியாருக்கு மகனாகப் பிறந்ததாகும்.

கடவுள் பணி செய்யும் பெருமையைக் கருவிலே திருவாகப் பெற்ற குட்டையன் செட்டியார், அடியார் கனவில் பழநியாண்டவரால் அறிமுகம்

செய்யப்பெற்ற அருளாளர். பழநிக்குக் காவடியெடுத்தும். பழநி ஆண்டவரின் திருவருளால், அடியார் துயர் தீர்த்தும், பழநிக் கோயில் பயணத்தைத் தொடங்கி வைத்தும் கடவுள் பணிக்குக் கால்கோள் செய்த கண்டனூர் நாயனார்தான் குட்டையன் செட்டியார்.

**ஆண்டவன் செய்து வைத்த அறிமுகம்:** நெற்குப்பைக் குமரப்பச் செட்டியாருக்கும், குறுநில மன்னர்களுக்கும் கனவில் பழநியாண்டவர் தோன்றி, "கண்டனூரில் இருந்து குட்டையன் என்பவன் காவடி எடுத்து வருவான். அவனை எதிர் கொண்டு அழையுங்கள், அடியார் கலி தீர்ப்பான்" என்று கூறினார். பழநியாண்டவர் கட்டளைப்படி, கண்டனூரை விட்டுக் காவடி தூக்கிப் புறப்பட்ட குட்டையன் செட்டியார், குன்றக்குடி வழியாகப் பழநியை அடைந்தார், இடும்பன் குளத்தில் காவடியை இறக்கி வைத்தார். பூசைகளை முடித்து மலைப்பிரகாரத்தில் அருளோடு காவடி ஆடிவரும் போது, நெற்குப்பைக் குமரப்பச் செட்டியாரும், வைகாவூர் நாட்டுச் சிற்றரசர் விஜயகிரி வேலாயுதத்துரை அவர்களும் நகரத்தார் நல்லடியார் பலரும் குட்டையன் செட்டியாரை இடும்பன் மலை அடிவாரத்தில் விருது வாத்தியங்களுடனும், மரியாதையுடனும் எதிர் கொண்டு அழைத்தனர். குட்டையன் செட்டியார், வைகாவூர் மன்னரைப் பார்த்து 'மூன்று நாளைக்கு முன்னதாக உன் கனவில் பழநி ஆண்டவர் காட்சி தந்து ஆண் குழந்தை பிறக்கும், அதற்கு வையாபுரித்துரை என்று பெயர் வை என்றதும் நினைவிருக்கிறதா?' எனக் கேட்டார்.

வைகாவூர் மன்னர் அருளோடு நிற்கும் குட்டையன் செட்டியாரிடம், அவரது ஆற்றலை வியந்து தமது செங்கோல் பிரம்பைக் கையில் தந்தார். மேலும் அவருடன் அன்னதான மடத்திற்கு வந்த அரசரிடம், ஆறுகால் சவுக்கையில் ஏறி நின்று, "எனக்காக அரண்மனையிலிருந்து 700 பொன் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாய். இன்னும் 300 பொன் எடுத்துக் கொண்டு பட்டத்து அரசியையும் அழைத்து வர ஆள் அனுப்பி இருக்கிறாய்" என்றார். அரசர் ஆனந்தக்கண்ணீர் விட்டார். அருள் வாக்குக் கேட்ட அரசியிடம் பிள்ளைப் பேற்றைப் பற்றிச் சொல்லி, காணிக்கையாக அரசியின் வலம்புரிச் சங்கைக் கேட்டார். மெய்ப்பொருள் உணர்ந்த குட்டையன் செட்டியார், தன் கைப்பொருளாகிய வலம்புரிச் சங்கை அறிந்தது கண்டு வியந்து, பணிந்து காணிக்கையாக்கினார். அரசரும் தனது கழுத்தில் சுடர் விட்ட சந்திரஹாரத்தைக் கழற்றி, பொருளரசர் கழுத்திற்குச் சுமையாக இருந்த இம்மாலை அருளரசர் மணிக்கழுத்தில் விளங்கட்டும் என்று காணிக்கையாக்கினார். செங்கோல் பிரம்பும், வலம்புரிச் சங்கும், சந்திரஹாரமும் குட்டையன் செட்டியாரின் அருளாற்றலுக்குச் சான்றாக இன்றும் இருந்து வருகின்றன.

(இத்தொடரின் கடைசிப் பகுதி அடுத்த இதழில் இடம்பெறும்)

**தகவல்- சித. பழனியப்பன். எழுத்து - சித.அருணாசலம்.**



## ஒன்றிணைந்து உருவாக்கிய நாடு

நாற்பது வருடங்களுக்கு முன்னர்,
நாடு ஒன்று உறுதியில்லாமல் பிறந்தது -அது
நிச்சயமில்லாமல் இருந்தது.
உயிர் பிழைத்திருப்பேன் என்று,
வேற்றுமைகளை எதிர்த்து அறைகூவல் விட்டது.
அதனிடம் எதுவுமில்லை, இயற்கை வளமுமில்லை.
இருந்ததெல்லாம் மக்கள் தான்.
எட்டுத்திக்கிலிருந்தும் வந்தவர்கள்.
பலதரப்பட்ட மொழியினைப் பேசுபவர்கள்
பல்வேறான உடைகளை உடுத்துபவர்கள்.
வெவ்வேறான உணவு வகைகளை உண்பவர்கள்.
ஆயினும் அவர்களிடம்
ஒரு பொதுவான தொலைநோக்கு இருந்தது.
ஒரு பொதுவான முடிவு இருந்தது.
அவர்கள் இந்த நாட்டிற்கு வந்த போது
நம்பிக்கையுடன், தீர்மானத்துடன், மனவலிமையுடன் வந்தனர்.
வேற்றுமைகளை எதிர்த்து வெற்றி பெறுவோம் என்ற
மனஉறுதி அவர்களிடம் இருந்தது.
விரைவில் அவர்கள் ஒரே மொழியைப் பேசத் தொடங்கினர்.
நல்லிணக்கத்தின் மொழியை,
சமாதானத்தின் மொழியை.
ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டனர்
ஒருவரை ஒருவர் மதித்தனர்.
ஒருவரை ஒருவர் பாராட்டினர்.
ஒன்றிணைந்து உறவுப் பாலத்தை உருவாக்கினர் - இன்றும்
ஒரே தொலைநோக்கைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.
பந்தங்களை வலுப்படுத்த விளைகிறார்கள்.
நல்லிணக்கமுடைய, சமாதானமுடைய இல்லத்தை உருவாக்க
சிங்கப்பூரே, நீ என்னையும் சேர்த்துக் கொள் என்கிறார்கள்.

**-திருமதி. உமா வள்ளியப்பன்.**

## கலை நிகழ்ச்சிகள்

வளரும் தளிர்களிடம் மிளிரும் திறமைகளை ஒருங்கே வெளிக்கொணர்ந்த விழாவாகக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிகள் எல்லாம் குறித்த நேரத்தில் நடத்தப்பட்டு, பார்வையாளர்கள் தங்கள் இருக்கைகளை விட்டு அசையாத வண்ணம் அமைக்கப்பட்டு இருந்தன. குழந்தைகள் சிறிதும் தயக்கமின்றி மேடையேறியது, அவர்களது தன்னம்பிக்கைக்குச் சான்றாக இருந்தது. குறிப்பாக நிகழ்ச்சியின் இறுதிக் கட்டத்தில் விரும்பியவர்கள்

மேடைக்கு வந்து நடனமாடலாம் என்று அறிவிக்கப்பட்ட போது, மேடை முழுவதையும் குழந்தைகள் ஆக்கிரமித்துக் கொண்டது அவர்களது ஆர்வத்தை உணர்த்தியது.

ஏறக்குறைய 700 பேர் கலைநிகழ்ச்சியைக் கண்டு ரசித்தனர். அரங்கத்தில் அமர இடமில்லாத நிலை ஏற்பட்டது என்றே கூறலாம். அக்கறையுடனும் கவனத்துடனும் தரமான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தால் நம்மவர்கள் தவறாது ஆதரவு அளிப்பார்கள் என்பது உண்மைதான். வருகை தந்து நிகழ்ச்சியின் வெற்றிக்கு உதவிய அனைவருக்கும் எங்கள் நன்றி.

நிகழ்ச்சியின் முடிவில் வழங்கப்பட்ட சுவையான உணவு பலரின் பாராட்டையும் பெற்றது. அந்த உணவுக்கான முழுச் செலவையும் இன்முகத்துடன் மனம் உவந்து ஏற்றுக் கொண்டு நன்கொடை அளித்த **டாக்டர் திரு. K. வெள்ளையப்பன்** (L130) அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

நிகழ்ச்சிக்குத் தாராளமாக நிதி உதவிய **திரு. M.A.M.R. முத்தையா** (திரு. எம்.ஏ.எம். ராமசாமி அவர்களது புதல்வர்) அவர்களுக்கும், **திரு ரா. முத்துகணேசன்** (Y0111) அவர்களுக்கும், நிகழ்ச்சியின் வெற்றிக்கு மிகவும் உறுதுணையாக இருந்த ஒலிபெருக்கி அமைப்பில் தன் முழு ஒத்துழைப்பை நல்கிய **திரு. C. செந்தில்** அவர்களுக்கும் இந்தத் தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். விழாவிற்கான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்த **கார்பார் திரு. லெ.நா. சுப்பையா செட்டியார்** அவர்களுக்கும் எங்கள் நன்றி.

நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்றவர்கள் விபரம்.

| | | |
|---|---|---|
| **பேச்சுப் போட்டி** | முதல் பரிசு | கண்ணன் அருணாசலம் |
| | இரண்டாம் பரிசு | ராமசாமி சொக்கலிங்கம் |
| | மூன்றாம் பரிசு | சாய் மீனாட்சி ராமு |
| **கட்டுரைப்போட்டி** | முதல் பரிசு | நாச்சம்மை நாச்சியப்பன் |
| | இரண்டாம் பரிசு | கலைவாணி முருகப்பன் |
| | மூன்றாம் பரிசு | ரவி மணிகண்டன். |
| **ஓவியப் போட்டி** | முதல் பரிசு | சூர்யா ராஜா |
| | இரண்டாம் பரிசு | மீனாட்சி வீரப்பன் |
| | மூன்றாம் பரிசு | அலமேலு சுப்ரமணியன் |
| **வண்ணம்** | முதல் பரிசு | காமாட்சி சுப்ரமணியன் |
| **தீட்டும் போட்டி** | இரண்டாம் பரிசு | அலமேலு வெங்கட் |
| | மூன்றாம் பரிசு | பூர்ணிமா வெங்கடாசலம் |

## 2004-ம் ஆண்டில் நடைபெற்ற தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்றவர்கள் (சங்கத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் படி)

| | | |
|---|---|---|
| PSLE | முதல் இடம் | மீனாள் D/O திரு தண்ணீர்மலை (L120) |
| | 2-ம் இடம் | ராமசாமி S/O திரு ராம. சொக்கலிங்கம் (L021) |



| | | |
|---|---|---|
| O-LEVEL | முதல் இடம் | ராமசாமி S/O திரு ஆர். சிங்காரம் (Y0216) |
| | 2-ம் இடம் | சரஸ்வதி தேவி D/O திரு சொ. பாலசுப்ரமணியன் (Y0033) |
| A-LEVEL | முதல் இடம் | சுபாஷிணி D/O திரு எஸ். நடராஜன் (L188) |

# கோவில் நிகழ்ச்சிகள்

## ஆடி மாதம்.

| | | | |
|---|---|---|---|
| 02-08-05 | ஆடி 17 | செவ்வாய்க்கிழமை | பிரதோஷம் |
| 03-08-05 | ஆடி 18 | புதன்கிழமை | பதினெட்டாம் பெருக்கு |
| 04-08-05 | ஆடி 19 | வியாழக்கிழமை | ஆடி அமாவாசை. |
| 05-08-05 | ஆடி 20 | வெள்ளிக்கிழமை | மீனாட்சியம்மன் சந்தனக்காப்பு - கண. மா. கண உபயம். துர்க்கை லட்சார்ச்சனை ஆரம்பம். |
| 06-08-05 | ஆடி 21 | சனிக்கிழமை | துர்க்கை லட்சார்ச்சனை 2வது நாள். |
| 07-08-05 | ஆடி 22 | ஞாயிற்றுக்கிழமை | துர்க்கை லட்சார்ச்சனை பூர்த்தி (ஆடிப்பூரம்) |
| 09-08-05 | ஆடி 24 | செவ்வாய்க்கிழமை | சுக்ல சதுர்த்தி, தேசிய தினம். |
| 12-08-05 | ஆடி 27 | வெள்ளிக்கிழமை | மீனாட்சியம்மன் சந்தனக்காப்பு - சோம. லெ. உபயம். சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை (சுவாதி) |

## ஆவணி மாதம்.

| | | | |
|---|---|---|---|
| 17-08-05 | ஆவணி 1 | புதன்கிழமை | பிரதோஷம் |
| 18-08-05 | ஆவணி 2 | வியாழக்கிழமை | நடராஜர் அபிஷேகம். |
| 19-08-05 | ஆவணி 3 | வெள்ளிக்கிழமை | பௌர்ணமி |
| 22-08-05 | ஆவணி 6 | திங்கட்கிழமை | மஹாசங்கடஹர சதுர்த்தி |
| 26-08-05 | ஆவணி 10 | வெள்ளிக்கிழமை | கார்த்திகை மலாக்கா ப.சி.கா. உபயம்.* தேய்பிறை அஷ்டமி. |
| 01.09.05 | ஆவணி 16 | வியாழக்கிழமை | பிரதோஷம் |
| 03.09.05 | ஆவணி 18 | சனிக்கிழமை | அமாவாசை. |
| 07.09.05 | ஆவணி 22 | புதன்கிழமை | விநாயகர் சதுர்த்தி- சாமி புறப்பாடு- பிள்ளையார் பட்டி நகரத்தார்கள் உபயம். |
| 08.09.05 | ஆவணி 23 | வியாழக்கிழமை | இராமாயணம் ஆரம்பம். இராமர் ஜெனனம். இரவு 7.00 சர்க்கார் உபயம். |
| 10.09.05 | ஆவணி 25 | சனிக்கிழமை | இராமாயணம் சீதா கல்யாணம். இரவு 07.15 தி.வள்ளியப்பன் உபயம். |
| 12.09.05 | ஆவணி 27 | திங்கட்கிழமை | ஆவணி மூலம். காரைக்குடி முத்து. சாம. சொ. ராம. உபயம். |
| 15.09.05 | ஆவணி 30 | வியாழக்கிழமை | பிரதோஷம் |

## புரட்டாசி மாதம்.

| | | | |
|---|---|---|---|
| 19-09-05 | புரட்டாசி 3 | திங்கட்கிழமை | இராமாயணம் கணையாழி இரவு 7.15 ராம. நாராயணன் உபயம். குரு பெயர்ச்சி. |
| 21-09-05 | புரட்டாசி 5 | புதன்கிழமை | இராமாயணம் சூடாமணி இரவு ,7.15 காரைக்குடி ராம. முத்தையா உபயம். |
| 21-09-05 | புரட்டாசி 5 | புதன்கிழமை | சுங்கடஹர சதுர்த்தி |
| 22-09-05 | புரட்டாசி 6 | வியாழக்கிழமை | கார்த்திகை அரு.சா. அரு காவேரி என்ற வள்ளியம்மை ஆச்சி உபயம். |
| 25-09-05 | புரட்டாசி 9 | ஞாயிற்றுக்கிழமை | தேய்பிறை அஷ்டமி |
| 27-09-05 | புரட்டாசி 11 | செவ்வாய்க்கிழமை | இராமாயணம் பரத்துவாசர் விருந்து இரவு சரஸ்வதி ஆச்சி குழுவினர் உபயம். |
| 28-09-05 | புரட்டாசி 12 | புதன்கிழமை | இராமாயணம். இராமர் பட்டாபிஷேகம். உமையாள் சங்கரலிங்கம் உபயம். |
| 29-09-05 | புரட்டாசி 13 | வியாழக்கிழமை | இராமாயணம். பிரியாவிடை. காலை 9 மணிக்கு காரைக்குடி வீர. அழகப்பன் உபயம். |
| 30-09-05 | புரட்டாசி 14 | வெள்ளிக்கிழமை | பிரதோஷம். |

* கோயில் நிர்வாகத்தில் பணம் கட்டியது.

## இதர செய்திகள்

1) புது உறுப்பினர்கள்.

| உறுப்பினர் எண். Y0409 | பழனியப்பன் ரவிச்சந்திரன்-சுதா தேவி |
|---|---|
| கிட்டங்கி எண். 01 | Blk 13 #14-64, |
| வைரவன் கோயில் | Holland Drive, |
| நேமத்தான் பட்டி | Singapore - 271013 Tel: 67784750 |

| உறுப்பினர் எண். Y0410 | நா.நாகப்பன் - மீனாட்சி |
|---|---|
| கிட்டங்கி எண். 09 | Blk 382, #10-119, |
| மாத்தூர்-அரும்பாக்கூர். | Tampines Street 32, |
| பி. கருங்குளம். | Singapore - 520382 Tel: 67837573 |

| உறுப்பினர் எண். Y0411 | ஏ. அழகப்பன்-சாரதாள். |
|---|---|
| கிட்டங்கி எண். 01A | Blk 15, #25-47, |
| மாத்தூர்-அரும்பாக்கூர். | Farrer Park Road, Tel: 62359354 |
| காரைக்குடி. | Singapore 210015. H/P: 81336744 |



| உறுப்பினர் எண். Y0412 | வே. முத்துப் பழனியப்பன். |
|---|---|
| கிட்டங்கி எண். 01 | 23, Woodlands Sector 1, |
| மாத்தூர்-மணலூர். | Woodlands Dormitory #02-43 |
| குழிபிறை | Singapore - 738068 H/P: 91789274 |

| உறுப்பினர் எண். Y0413 | ஸ்ரீ லட்சுமி |
|---|---|
| கிட்டங்கி எண். 01 | Blk-467, #10-1006, |
| இரணிக் கோயில் | Ang Mo Kio Avenue 10, Ph: 64548403 |
| பள்ளத்தூர் | Singapore – 560467. H/P : 94526446 |

3) பிறப்பு.

- நமது சங்க உறுப்பினர் திரு. சாத்தப்பன் - திருமதி மெய்யம்மை (Y0325) தம்பதியினரின் மகன், டாக்டர் சாத்தப்பன், திருமதி முத்து தம்பதியினருக்கு 27-01-05, வியாழக்கிழமை அன்று **மீனாட்சி (எ) மெய்யம்மை** என்ற பெண் குழந்தை பிறந்திருக்கின்றது.
- நமது சங்க உறுப்பினர் திரு இ. சோமசுந்தரம் - திருமதி சோம. ருக்மணி (L101) தம்பதியினருக்கு 14-02-05 அன்று **அண்ணாமலை** என்ற ஆண் குழந்தை பிறந்திருக்கின்றது.
- நமது சங்க உறுப்பினர் திரு நா.நாகப்பன் - திருமதி மீனாட்சி (Y0410) தம்பதியினருக்கு **நாச்சியப்பன்** என்ற ஆண் குழந்தை பிறந்திருக்கின்றது. இம்மழலை திரு நாக. நாச்சியப்பன் - திருமதி சகுந்தலா (Y0121) தம்பதியினரின் மகன் வழிப் பேரனுமாவான்
- நமது சங்க உறுப்பினர் திரு PL.V. கதிரேசன் - திருமதி மீனாட்சி (Y066) தம்பதியினருக்கு 06-04-05 அன்று **சொர்ணவள்ளி (எ) அபிராமி வள்ளியம்மை** என்ற பெண் குழந்தை பிறந்திருக்கின்றது.
- நமது சங்க உறுப்பினர் திரு வ. அடைக்கப்பன் - திருமதி வள்ளியம்மை (Y002) தம்பதியினருக்கு 02-05-05 அன்று **கிருஷ்ணன்** என்ற ஆண் குழந்தை பிறந்திருக்கின்றது.

"இப் பூவுலகில் புதிதாய்ப் பூத்துள்ள இம்மழலைகள் இறைவனின் திருவருளால் எல்லா வளமும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்."

4) <u>மறைவு</u>

- நமது சங்க உறுப்பினர் திரு சுப. லெட்சுமணன் (L035) அவர்களின் தாயார் **திருமதி சுப. நாச்சம்மை ஆச்சி** அவர்கள் 28-04-05 அன்று காரைக்குடியில் இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
- நமது சங்க உறுப்பினர்கள், திரு பி.கே. செட்டி (L013) மற்றும் திரு பெரி. பெரிச்சியப்பன் (Y158) ஆகியோரது தாயார் **திருமதி பெரி. காந்தி ஆச்சி** அவர்கள், கடந்த மே மாதம் 20-ம் தேதி இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அறிவிப்பு - புதிய முகவரித் தொகுப்பு வெளிவர இருப்பதால் இந்த இதழில் முகவரி மாற்றம் பகுதி இடம் பெறவில்லை.



# <u>இலக்கியவிழா அழைப்பிதழ்</u>

<u>ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில் திருமண மண்டபத்தில்</u>

<u>இனிய தமிழ் முழக்கம்!</u>

தமிழ் ஆர்வலர்களுக்கு அரிய விருந்து. நகரத்தார்களின் தமிழ்ப் புலமை காண அனைவரும் வாரீர்!

**நாள் - 03-09-05, சனிக்கிழமை**

**நேரம்- மாலை 05.00 மணி.**

## <u>1. கவிதைப் பூங்கா</u>

**பார்வையாளர்கள்** தாங்கள் எழுதிய, படித்து ரசித்த கவிதைகளை வாசிக்கப் பங்கெடுக்கும் நிகழ்ச்சி.

## <u>2. கவியரங்கம்</u>

தலைமை: முனைவர் **திரு சுப. திண்ணப்பன்** அவர்கள்.

<u>தலைப்பு - *விழிப்புணர்வு வேண்டும்!*</u>

| | |
|---|---|
| ***குழந்தை வளர்ப்பில்*** | திரு க. வெங்கடாசலம் |
| ***பொருளாதாரத்தில்*** | திரு அழகு சுந்தரம். |
| ***சமுதாயத்தில்*** | திரு சா. மெய்யப்பன் |
| ***பருவத்தில்*** | திரு சித. அருணாசலம். |
| ***உனக்குள்*** | திரு ராம. வைரவன். |
| ***குலத்தில்*** | திரு லெ. சக்தி குமார். |

## <u>3. பட்டி மன்றம்.</u>

நடுவர் : முனைவர் **திரு க. ஐங்கரன்** அவர்கள்.

*<u>தலைப்பு - இன்றைய சூழலில் குடும்ப முன்னேற்றத்திற்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பது.</u>*

| *<u>ஆண்களே!</u>* | *<u>பெண்களே!</u>* |
|---|---|
| **திரு சுப. அருணாசலம்** (அணித் தலைவர்) | **திரு. சுபா முத்து நடராஜன்** (அணித் தலைவர்) |
| திரு வெ. இராகவன் | திரு கண. மாணிக்கம் |
| செல்வி அலமு வெங்கடாசலம் | செல்வன் அருணாசலம் கண்ணன் |

குறிப்பு: 1. நிகழ்ச்சியின் இறுதியில் இரவு உணவு வழங்கப் படும்.
2. அன்றைய தினம் நகரத்தார் கையேடு வெளியிடவும் திட்டமிடப் பட்டுள்ளது.